வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 28/2024

வழக்கு சாட்சி – எ.ம.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. செல்வா சுப்ரமணியன் | தொழில் | :: உதவி துணைத்தலைவர் |
| த/ பெயர் | :: D.பாலதண்டபாணி | வயது | :: 44/2026 |
| கிராமம் | :: சென்னை | | |
| தாலுகா | :: சென்னை | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 18.06.2026.

**முதல் விசாரணை** (நேரம் : மதியம் 12.10 மணி)

நான் 5ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணியாற்றுகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அவை தயார் செய்யப்பட்டது. எங்கள் நிறுவனத்திலிருந்து 4ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய **வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது எ.ம.சா.ஆ.3. 4ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீடு சான்று நகல் எ.ம.சா.ஆ 4.** எங்கள் நிறுவனத்தை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

இந்த விபத்தானது 3ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் நடந்தது. 3ம் எதிர்மனுதாரரும், அவர் ஓட்டி வந்த ஆட்டோ உரிமையாளரும் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் என்பதால் 3ம் எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் போலீசார் 1ம் எதிர்மனுதாரர் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றும், முழுக்க முழுக்க 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தை

Digitally signed by J JEYA SUTHAHAR
J JEYA SUTHAHAR
Date: 2026.06.18 16:47:10 +0530

கவனக்குறைவாக இயக்கியுள்ளதால் மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

விபத்து நடந்த நாள் 16.06.2023 என்றால் சரிதான். விபத்து சமயம் மனுதாரரை ஏற்றி சென்ற TN 65 AS 3852 என்ற பதிவெண் கொண்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த காப்பீடு 05.01.2023 முதல் 04.01.2024 வரை ஊர்ஜிதத்தில் தான் இருந்தது. விபத்து சமயம் மேற்படி காப்பீடு சான்று ஊர்ஜிதத்தில் தான் இருந்தது என்றால் நிபந்தனைகளுக்குட்பட்டு ஊர்ஜிதத்தில் இருந்தது. ஆட்டோவை ஓட்டி சென்ற சர்புதீன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கும் பட்சத்தில் மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் நிபந்தனைகளுக்குட்பட்டு எங்கள் நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆவணம் 3ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநரான 3ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தான் எனது நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன். அதனால் எங்கள் நிறுவனம் தான் இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது ஓட்டுநரின் கடமை என்றால் சரிதான். விபத்து ஏற்படும் பட்சத்திலும், 3ம் நபர் நபருக்கான வாகனத்தின் காப்பீடு பாலிசி ஊர்ஜிதத்தில் இருக்கும் பட்சத்திலும், வாகனத்தில் சென்று காயம்பட்ட நபர்களுக்கு காப்பீடு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் நிபந்தனைகளுக்குட்பட்டு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.4 ஆவணம் எங்கள் நிறுவனத்தின் காப்பீடு

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.06.18 16:47:16 +0530

பாலிசி ஆகும். அதில் Own damage–க்கான பிரிமீயம் தொகையும், 3rd Party–க்கான பிரிமீயம் தொகையும் முறையாக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். Own damage என்பது வாகனத்திற்கான காப்பீடு ஆகும். 3rd Party என்பது இந்த வழக்கை பொறுத்தவரை அந்த ஆட்டோவில் பயணம் செய்த மனுதாரர் உள்ளிட்ட பயணிகள் ஆகும். எ.ம.சா.ஆ.3 அறிவிப்பை அதில் குறிப்பிட்டுள்ள நபர் பெற்றுக்கொண்டரா என்பதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யவில்லை. விபத்தில் காயம்பட்ட நபர்களுக்கு எங்கள் நிறுவனத்தால் எந்த இழப்பீடும் கொடுக்கக்கூடாது என்பதற்காக நாங்கள் முன்னுக்கு பின் முரணான செயல்களை செய்தும், பொய்யான தகவல்களை கூறியும் வருகிறோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.06.18 16:47:22 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.